மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
க.பொ.த உயர்தரப் பரீட்சை
மூன்றாந் தவணை - 2026

இலங்கை வரலாறு Srilankan History	Three Hours 10 minutes Gr -12 (2027)	25B	T	I

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

இலங்கை வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி 1978 வரை

அறிவுறுத்தல்கள்

- இவ்வினாத்தாள் பகுதி I, பகுதி II ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி I இல் 1 - 20 வரையான எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே வழங்கப்பட்டட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும்.
- விடைகளை எழுதி முடித்த பின்னார் பகுதி I இற்கான விடைகளை பகுதி II இதற்கான விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

பகுதி - I

1 தொடக்கம் 5 வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது. அந்தப் பொருந்தாத பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

1. (1) காசா தொட்ட (2) கோகண்ண (3) மகாதித்த
   (4) ஊராதோட்ட (5) ஜம்புகோளப்பட்டினம் (.....)

2. (1) பட்டதொம்பலென (2) பிதுரங்கல (3) பெலிலென
   (4) பாஹியன்கல (5) இப்பன்கட்டுவ (.....)

3. (1) தூபராமதூபி (2) தெமழமகாசாய (3) ருவன்வெலிசாய
   (4) மிரிஸவெட்டிய (5) ஜேதவனராம (.....)

4. (1) இரண்டாம் கஜபாகு (2) லீலாவதி (3) கல்யாணவதி
   (4) நான்காம் மகிந்தன் (5) பராக்கிரம பாண்டியன் (.....)

5. (1) கோகில சந்தேசய (2) குத்தில காவியம் (3) மயூர சந்தேசய
   (4) செலஹினி சந்தேசய (5) புதுகுணலங்கார (.....)

Past Papers Wiki

6 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தை எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.

6. (1) மல்வத்து ஓயா - நாச்சதுவ வாவி
   (2) கல் ஓயா - சேனநாயக்க சமுத்திரம்
   (3) யான் ஓயா - பதவியாக் குளம்
   (4) கிரிந்தி ஓயா - திஸ்ஸமகாராமக் குளம்
   (5) கனகராயன் ஆறு - இரணைமடுக் குளம் (.....)

7. (1) தெவனகல கல்வெட்டு - கீர்த்தி ஸ்ரீ மேவன்
   (2) அம்பகமுவ கல்வெட்டு - முதலாம் விஜயபாகு
   (3) சங்கமுவ விகாரைக் கல்வெட்டு - முதலாம் பராக்கிரமபாகு
   (4) ஹோபிட்டிகம கல்வெட்டு - நான்காம் உதயன்
   (5) வெஸ்ஸகிரியக் கல்வெட்டு - நான்காம் மகிந்தன் (.....)

8. (1) லங்காபுர - முதலாம் பராக்கிரமபாகு
   (2) மிகார - தாதுசேனன்
   (3) கபிசீச - வலகம்பா
   (4) தேரபுத்தபாய - சத்தாதீச
   (5) ரவிதேவ - முதலாம் விஜயபாகு (.....)

9. (1) லோவட சங்கராவ - வீதாகம மைத்திரி தேரர்
   (2) குத்தில காவியம் - புத்தகோசதேரர்
   (3) செலஹினி சந்தேசய - தொட்டகமுவ ஸ்ரீ இராகுலதேரர்
   (4) சுபாஷித்த - அழகிய வண்ண முகவெட்டி
   (5) கோகில சந்தேசய - இருகல்குல திலகதேரர் (.....)

10. (1) தம்பதெனிய - நான்காம் விஜயபாகு
    (2) யாப்பகூவ - முதலாம் புவனேகபாகு
    (3) குருணாகல் - நான்காம் பராக்கிரமபாகு
    (4) கம்பளை - மூன்றாம் விக்கிரமபாகு
    (5) கோட்டை - ஐந்தாம் பராக்கிரமபாகு (.....)

11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள்/ கூற்றுக்கள்/ திகதிகளின்/ தொகுதிகள் X, Y என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/ கூற்றுக்கள்/ திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும் போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும் சரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவு செய்து அடைப்புக்குள் எழுதுக.

11.

X	Y
(i) தெதுறு ஓயா	A - கோண நதி
(ii) மல்வத்து ஓயா	B - வனவாகினி நதி
(iii) மாணிக்க கங்கை	C - ஜஜ்ஜிர நதி
(iv) கலா ஓயா	D - கதம்ப நதி
(v) வளவை கங்கை	E - கப்பரகந்த நதி

(1) DCEAB (2) CDEBA (3) CDEAB (4) CDAEB (5) CDBAE (.....)

12.

X	Y
(i) பண்டுகாபயன்	A - மகாசேனன்
(ii) காவன்தீசன்	B - மூத்தசிவன்
(iii) வசபன்	C - துட்டகைமுனு
(iv) தாதுசேனன்	D - வங்கநாசிகதிஸ்ஸ
(v) கோதாபயன்	E - முகலன்

(1) BCEDA (2) BCDEA (3) BCDAE (4) BCADE (5) ACDEB (.....)

13.

X	Y
(i) சேனன், குத்திகன்	A - நான்காம் மகிந்தன்
(ii) எல்லாளன்	B - மித்தசேனன்
(iii) புலஹத்தன்	C - வலகம்பா
(iv) பண்டுபாரிந்தன்	D - அசேலன்
(v) மூன்றாம் கிருஷ்ணன்	E - சூரதிஸ்ஸன்

(1) EDBCA (2) ECDBA (3) DECBA (4) EDCAB (5) EDCBA (.....)

14.

X	Y
(i) சீன	A - முதலாம் இராஜராஜன்
(ii) பாண்டிய	B - மாகன்
(iii) கலிங்க	C - சந்திரபானு
(iv) சோழ	D - ஜடாவர்மன்
(v) ஜாவக	E - செங்கோ

(1) EDBCA (2) DEBAC (3) EBDAC (4) EDABC (5) EDBAC (.....)

PAST PAPERS WIKI

15.

X	Y
(i) விஜயபாகு பிரிவேனா	A - றைகம
(ii) பத்மாவதி பிரிவேனா	B - பெப்பிலியான
(iii) ஸ்ரீ கணானந்த பிரிவேனா	C - தொட்டகமுவ
(iv) சுனேத்திரா தேவி பிரிவேனா	D - காரகால
(v) இருகல்குலதிலக பிரிவேனா	E - முல்கிரிகல

(1) CDABE (2) EBDAC (3) EDABC (4) CDBAE (5) CADBE (.....)

16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எதிரே உள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

16. முன்வரலாற்றுக் காலக் குடியிருப்பிற்கு மிகச் சிறந்த ஆதாரமாக அமைவது
(1) உடரஞ்சமடம (2) பாகியன்கல (3) இராவண எல
(4) பட்டதொம்பலென (5) கல்சொஹன் (.....)

17. பிக்கு புத்தகோஷர் இலங்கைக்கு வருகை தந்தபோது ஆட்சி புரிந்த மன்னன்
(1) சந்தமுகசிவ மன்னன் (2) மானவர்ம மன்னன்
(3) கனிட்டதிஸ்ஸ மன்னன் (4) மகாநாம மன்னன்
(5) வங்கநாசிகதிஸ்ஸ மன்னன் (.....)

18. நான்காம் உதய மன்னன் காலத்தில் படையெடுத்த சோழப் பேரரசன்
(1) கரிகாலன் (2) விஜயாலயன் (3) ஆதித்தன்
(4) முதலாம் இராஜேந்திரன் (5) முதலாம் பராந்தகன் (.....)

19. கீர்த்தி ஸ்ரீ மேவ மன்னன் மகாசேனனின் மகன் என்பதை உறுதிப்படுத்தும் கல்வெட்டு
(1) வேவல் கெட்டிய கல்வெட்டு (2) தோணிகல கல்வெட்டு
(3) பதுளைத் தூண் கல்வெட்டு (4) ஹபஸ்ஸ கல்வெட்டு
(5) கல்பொத்த கல்வெட்டு (.....)

20. ஷட்பாஷா பரமேஸ்வரன் எனப்பட்டவர்
(1) இஸ்தபதிராயர் (2) ஸ்ரீ ராகுல தேரர்
(3) மயூரபாத தேரர் (4) நன்னரு துணைவர்
(5) வத்தாவே தேரர் (.....)

(20x1=20புள்ளிகள்)

இலங்கை வரலாறு

பகுதி II

அறிவுறுத்தல்கள் :-

- **முதலாம் வினா கட்டாயமானது**
- **முதலாம் வினாவிற்கு விடையளிப்பதற்கு இலங்கை புறவுருவப்படம் வழங்கப்படும்.**
- **ஏனைய வினாக்களில் விரும்பிய ஒன்றிற்கு மட்டும் விடை தருக.**

1. உங்களுக்கு வழங்கப்பட்ட இலங்கைப் புறவுருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

(i) செங்கடகல	(ii) பாகியன்கல	(iii) மாகம
(iv) யான் ஓயா	(v) கிழக்கு மாகாணம்	(vi) ஊராத்தோட்ட
(vii) தெதுறு ஓயா	(viii) நாச்சதுவ வாவி	(ix) இரணைமடுக்குளம்
(x) தம்பதெனியா	(xi) கதிர்காமம்	(xii) சிகிரியா
(xiii) வல்லிபுரம்	(xiv) பூநகரி	

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

பகுதி B

2. இலங்கை வரலாற்றைத் தீர்மானிப்பதில் உள்ளக புவியியல் காரணிகள் செல்வாக்கு செலுத்திய விதத்தை பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க
   (i) துறைமுகங்கள்
   (ii) ஆறுகளும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளும்
   (iii) மத்திய மலைநாடு (16 புள்ளிகள்)

3. (i) இராசரட்டை நாகரிகத்தின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் ஏதுவான காரணிகளைப் பரிசீலனை செய்க. (16 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றில் வையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   (i) வசபன்
   (ii) சிகிரியா
   (iii) அநுராதபுரகால வர்த்தகம்
   (iv) கோட்டை இராசதானி காலத்து கல்வி நடவடிக்கைகள்

(8x2=16 புள்ளிகள்)

Past Papers Wiki

க.பொ.த உயர்தரப் பரீட்சை


மூன்றாந் தவணை - 2026

இலங்கை வரலாறு
Sri Lankan History

இலங்கைப் புறவுருவப் படம்

Gr -12 (2027)

25	T	I



மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
க.பொ.த உயர்தரப் பரீட்சை
மூன்றாந் தவணை - 2026

இந்திய வரலாறு Indian History	Gr -12 (2027)	25A	T	I

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்
வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

பகுதி I

1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது. அந்தப் பொருந்தாத பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. (1) மெகஸ்தினிஸ் (2) தாராநாத் (3) அல்புரனி
(4) ஸ்ராபோ (5) பட்டா (.....)

2. (1) நீலகிரி (2) மேற்கு காற்றாடி (3) இமயம்
(4) கிழக்குக் காற்றாடி (5) இந்துகுஷ் (.....)

3. (1) மொகஞ்சதாரோ (2) கலிபங்கன் (3) புரோச்
(4) ரகிகார்ஹி (5) ஹரப்பா (.....)

4. (1) அனு (2) பௌருவ (3) துர்வாச
(4) யது (5) புரு (.....)

5. (1) சந்திரகுப்த மௌரியன் (2) 2ஆம் சந்திரகுப்தன் (3) பிந்துசாரன்
(4) அசோகன் (5) குணாளன் (.....)

11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் வீதம் தரப்பட்டுள்ளன அவற்றுள் ஒரு சோடியிலுள்ள சொற்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.

6. (1) ஹர்சவர்த்தனன் - புரோச்சி கல்வெட்டு
(2) 2ஆம் சந்திரகுப்தன் - வடமதுரைக் கல்வெட்டு
(3) காரவேல - மஸ்கி
(4) அசோகன் - மன்சேரா
(5) உருத்திரதாமன் - ஜீனாகாட் (.....)

7. (1) நர்மதை - விந்தியம்
(2) காவேரி - நீலகிரி
(3) துங்கபத்திரை - மேற்கின் மலைத்தொடர்ச்சி
(4) ராவி - சுலைமான்
(5) தப்தி - சத்புர மலைத்தொடர் (……..)

8. (1) சேனானி - சேனாதிபதி
(2) சூத - தேர்ச்சாரதி
(3) பாகதுக - வரிகள்
(4) புரோகிதர் - அரசனின் ஆலோசகர்
(5) சங்கிரிஹித்ரி - பொருளாளர் (……..)

9. (1) மகதம் - பாடலிபுரம்
(2) சேதி - சுத்திமதி
(3) குரு - இந்திரப்பிரஸ்தம்
(4) வத்சயம் - வைசாலி
(5) மல்லம் - பாவா (……...)

10. (1) ஹரியங்க - அயாதசத்துரு
(2) சிசுநாக - சிசுநாகன்
(3) நந்த - தனநந்தன்
(4) மௌரிய - பிருகர்த்தனன்
(5) சுங்க - கொண்டோப்பர்நிஸ் (……..)

11 தொடக்கம் 12 வரையான ஒவ்வொரு வினாவிலும் X, Y என்னும் இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. X நிரலுக்கு ஏற்ப Y நிரலை ஒழுங்கு படுத்தும் போது கிடைக்கும் சரியான சேர்மானத்தின் இலக்கத்தை தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

	X	Y
11.	(i) நாடகம்	A. சாகுந்தலம்
	(ii) வானியல்	B. இராஜதரங்கனி
	(iii) வரலாறு	C. மகாபாசியம்
	(iv) மெய்யியல்	D. சூரியசித்தாந்தம்
	(v) இலக்கணம்	E. சாங்கிய சூத்திரம்

(1) ABDEC (2) BDEAC (3) CBDEA (4) ADBEC (5) EBCDA (……..)

	X	Y
12.	(i) விதிசாதேவி	A கிரகவர்மன்
	(ii) வஜிரா	B அசோகன்
	(iii) மல்லிகாதேவி	C பிம்பிசாரன்
	(iv) கோசலாதேவி	D பிரசேனஜித்
	(v) ராஜ்ய ஸ்ரீ	E அயாதசத்துரு

(1) ACDEB (2) BECAD (3) EBCAD (4) BEDCA (5) CBEAD (……..)

13 தொடக்கம் 14 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தாதுள்ளது அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.

13. பிந்திய வேதகாலம்

(1) பிந்திய வேதகாலத்தில் மன்னராட்சிமுறை வளர்ச்சியடைந்தமை.
(2) கோத்திரத் தலைவர்கள் இராஜன் என அழைக்கப்பட்டமை.
(3) ஏக தெய்வக் கொள்கை வளர்ச்சியடைந்தமை.
(4) பிராமணரின் செல்வாக்கு மேலோங்கியமை
(5) யசுர், சாமம். அதர்வனம் ஆகியவை இக்கால வரலாறுகளைக்கூறும் முக்கிய இலக்கியங்களாகும்.

(……...)

14. மௌரியர் நிர்வாகம்

(1) மௌரிய நிர்வாகத்தின் அதியுயர் தலைவனாக மன்னன் விளங்கினான்.
(2) மத்தி நிர்வாகம் பாடலிபுரத்தினை மையமாகக் கொண்டு இடம்பெற்றது.
(3) இளவரசன், புரோகிதர், தளபதி, முதலமைச்சர் ஆகியோர் உயர் அதிகாரிகளாவர்
(4) சமூக நலன்புரி நடவடிக்கைகளுக்காக மகாமாத்திரர் என்னும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.
(5) மௌரியரின் பிராந்திய நிர்வாக அலகுகள் மண்டலங்கள் எனப்பட்டன. (……..)

15 தொடக்கம் 16 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (A), (B), (C), (D) எனும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.

(A) யும் (B) யும் மாத்திரம் சரியாயின் ……1 எனவும்
(A) யும் (C) யும் மாத்திரம் சரியாயின் ……2 எனவும்
(B) யும் (C) யும் மாத்திரம் சரியாயின் ……3 எனவும்
(C) யும் (D) யும் மாத்திரம் சரியாயின் ……4 எனவும்
வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர் மானங்கள் சரியாயின் ……..5 எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

அறிவுறுத்தல்களின் சுருக்கம்.				
1	2	3	4	5
(A) யும் (B) யும் மாத்திரம் சரி	(A) யும் (C) யும் மாத்திரம் சரி	(B) யும் (C) யும் மாத்திரம் சரி	(C) யும் (D) யும் மாத்திரம் சரி	வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி

15. ஹரப்பா நாகரிகத்தின் வீழ்ச்சி பற்றிய கருத்துக்கள்.

(A) ஆரிய ஆக்கிரமிப்பு
(B) சனத்தொகைப் பெருக்கம்
(C) தீ விபத்து
(D) வர்த்தக வீழ்ச்சி (……..)

16. சந்திரகுப்த மௌரியன்

(A) மௌரியப் பேரரசின் ஸ்தாபகன் சந்திரகுப்த மௌரியனாவான்
(B) இவன் வடமேற்கிந்தியா மீதான கிரேக்கரின் ஆக்கிரமிப்பை முறியடித்தான்
(C) சந்திரகுப்த மௌரியனைத் தொடர்ந்து பிம்பிசாரன் அரியணை ஏறினான்.
(D) இவனது ஆட்சிக் காலத்திலேயே பாடலிபுரம் தலைநகராக்கப்பட்டது. (……..)

Past Papers Wiki

17 தொடக்கம் 18 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

17. கண அரசுகளில் ஒன்று
(1) மல்ல (2) பாஞ்சாலம் (3) கோசலம்
(4) மத்சயம் (5) அங்கம் (.....)

18. எகிப்திய மன்னனான தொலமி பில்டல்போசினால் மௌரிய அரச சபைக்கு அனுப்பப்பட்ட தூதுவன்.
(1) மெகஸ்தினிஸ் (2) அலெக்சாண்டர் (3) மௌஸ்
(4) சேல்யூகஸ் நிகேட்டர் (5) டியோனிசியெஸ் (.....)

19 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்கு கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று
1	சரியானது	பிழையானது
2	சரியானது	சரியானது
3	பிழையானது	பிழையானது
4	பிழையானது	சரியானது
5	சரியானது	சரியானதாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது.

	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று	
19	கி.மு – 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலே 16 மகாஜனபதங்கள் இருந்தன என அங்குத்தர நிகாய என்ற பௌத்த இலக்கியம் மூலம் அறிய முடிகின்றது.	16 மகாஜன பதங்களில் முடியாட்சி அரசுகளும் குடியாட்சி அரசுகளும் நிலவின. வஜ்ஜியும் மல்லவும் தவிர ஏனையவை முடியாட்சி அரசுகளாகும். இவற்றுள் மகதம் இறுதியில் வலிமைவாய்ந்த பேரரசாக எழுச்சி பெற்றது.	(.....)
20	மௌரிய வம்சத்தின் ஸ்தாபகன் சந்திரகுப்த மௌரியன் ஆவான்.	மௌரிய வம்சம் புஷ்யமித்திரன் கொலையுண்டதோடு முடிவிற்கு வந்தது.	(.....)

பகுதி II

அறிவுறுத்தல்கள்.

- **இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.**
- **பகுதி II ஆனது A,B ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது.**
- **பகுதி A இன் வினா கட்டாயமானது.**
- **பகுதி B யில் இருந்து ஒரு வினாவினைத் தெரிவு செய்து இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

(முதலாம் வினாவிற்கு விடையளிப்பதற்கு இந்தியப் புறவுருவப்படம் வழங்கப்படும்.

பகுதி A

1. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தியப் புறவுருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

(i) காஞ்சி	(ii) சார்புரமலை	(iii) சிந்து
(iv) பாருகச்ச	(v) ரூபர்	(vi) அஜந்தா
(vii) மக்ரான்	(viii) ஆரவல்லி	(ix) கலிங்கம்
(x) பாடலிபுரம்	(xi) துங்கபத்திரா	(xii) ஐகோல்
(xiii) பெஷாவர்	(xiv) பிரதிஸ்தான்	

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

பகுதி B

2. "சிந்துவெளி நாகரிகம் இந்தியாவின் மூத்த ஒரு நகரமயமான நாகரிகமாகும்."
   (i) நகரக் கட்டமைப்பு (06 புள்ளிகள்)
   (ii) நகரப் பண்புகள் (10 புள்ளிகள்)

3. இருக்கு வேதகால அரசியல், சமய நிலைகளின் முக்கிய பண்புகளை ஆராய்க. (16 புள்ளிகள்)

4. "அசோகன் திக்விஜயத்திலும் தர்மவிஜயத்திலும் தலைசிறந்தவனாக விளங்கினான்"
   (i) அசோகனது வரலாறுகளை அறிய உதவும் இரண்டு கல்வெட்டுக்கள் தருக. (02 புள்ளிகள்)
   (ii) அசோகனது அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாகக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)
   (iii) அசோகனது தர்மவிஜயக் கொள்கையின் சிறப்புக்களை ஆராய்க. (08 புள்ளிகள்)

5. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினது வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
   (i).. சாசனங்கள்
   (ii). வடமேற்குக் கணவாண்கள்
   (iii) மௌரியருக்கு முன்னரான மகதத்தின் அரசியல்
   (iv) சல்யூகஸ் நிகேட்டர் **(08 x 2 = 16 புள்ளிகள்)**

Past Papers Wiki


க.பொ.த உயர்தரப் பரீட்சை
மூன்றாந் தவணை - 2026

இந்திய வரலாறு
Indian History

இந்தியப் புறவுருவப் படம்

Gr -12 (2027)

25A | T | I



PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library